ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1642/9 - 2010 පෙබරවාරි 23 වැනි අඟහරුවාදා - 2010.02.23
*1642/9 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

3/6/7.
குறிப்பு இல. : எல்டீ/05/2007/ஈ/195.

கொபெய்கனே சிறி சுமணசிறி பாடசாலை மைதானத்திற்காக கீழ்க்காணும் காணியை அரசு எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கிறது என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

வட மேல் மாகாணத்தில், குருணாகல் மாவட்டத்தில், கொபெய்கனே பிரதேச செயலாளர் பிரிவில், பலதொர கோரளையில் 1307, அமுணுகொள கிராம சேவகர் பிரிவில், சியம்பலாகஸ்வெடிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. 1624, பிற்சேர்க்கை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணம் 18.4542 ஹெக்டயார்ஸ் கொண்ட காணியின் ஒரு துண்டின் விபரம் :

**துண்டு இல. 168**
காணியின் பெயர் : மெத மூக்கலான ; விபரம் : தற்போது சிறி சுமண சிறி பாடசாலை மைதானம் அமைந்திருக்கும் காணி ; உரிமை கோருபவர் : டீ. எம். சந்திராவத்தி ; விஸ்தீரணம் : 0.6474 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொபெய்கனே பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010.05.05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். டப். எஸ். சமரதிவாகர,
பிரதேச செயலாளர்,
கொபெய்கனே.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கொபெய்கனே,
2010.02.15.

03 - 356

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 4/9/1/9.
காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2003/ஈ/527.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

காலி மாவட்டத்தில், அம்பலங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், விலேகொடை கிராமத்தில், இல. 84, விலேகொடை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அளவையாளர் அதிபதியால் தயாரிக்கப்பட்ட ஆ. வ. ப. கா 3708 உடைய ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் சுமார் 0.0569 ஹெக்டயார் உடைய ஜம்புகஹவத்தை எனும் (வரு. வரி இல. 11, தேகொடை வீதி) காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : ஆ. வ. ப. கா 2793 இல் துண்டு இல. 5 உம் வீதியும் (நகர சபை) ; கிழக்கு : ஆ. வ. ப. கா 2793 இல் துண்டு இல. 05 உம் வீதியும் (நகர சபை)யும் ஹரிஸ்சந்திர குலரத்ன உரிமை கோரும் ஜம்புகஹவத்தையும் ( வரு. வரியிலக்கம் 11, தேகொடை வீதி) ; தெற்கு : ஆ. வ. ப. கா 300 இல் துண்டு இல. 09 உம் தேகொடை வீதியும் ; மேற்கு : ஆ. வ. ப. கா 300 இல் துண்டு இல. 09 உம் தேகொடை வீதியும் ஆ. வ. ப. கா 2793 இல் துண்டு இல. 05 உம் வீதியும் (நகர சபை).

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அம்பலங்கொடை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010.04.01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. எல். வர்ணன் பெரேரா,
பிரதேச செயலாளர்,
அம்பலங்கொடை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பலங்கொடை,
2009.12.16.

03 - 357

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.